தினமணி

29.10.2017

# பள்ளி மாணவ, மாணவிகளுக்கு திறன் வெளிப்பாடு போட்டி




போட்டிகளை தொடக்கி வைக்கிறார்கள் ஆலையின் துணை மேலாண்மை இயக்குநர் வெள்ளியங்கிரி, முதன்மை பொது மேலாளர் சுப்ரமணியன், கிருஷ்ணன், பாலசுப்ரமணியன் உள்ளிட்டோர்.

கரூர், அக். 28: புகழூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான திறன் வெளிப்பாடு போட்டிகள் சனிக்கிழமை தொடங்கியது.

தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை வரை இரு நாட்கள் நடைபெறும் இப்போட்டியை ஆலையின் துணை மேலாண் இயக்குநர் வெள்ளியங்கிரி, முதன்மை பொது மேலாளர்(உற்பத்தி) சுப்ரமணியன், செயல் இயக்குநர்(இயக்கம்) கிருஷ்ணன், பொதுமேலாளர்(மின்சாரம், கருவியல்) பாலசுப்ரமணியன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்தனர்.

போட்டியில் கரூர், திருச்சி, நாமக்கல், திண்டுக்கல், திருப்பூர், சேலம், பெரம்பலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 15 அரசுப்பள்ளிகள் உள்பட 56 பள்ளிகளைச் சேர்ந்த 1,124 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

இதில் ஆங்கிலம் மற்றும் தமிழில் பேச்சு, கட்டுரைப்போட்டிகள், திருக்குறள் மற்றும் தமிழ் இலக்கியத்தில் வினாடி-வினா போட்டிகள், தமிழ் குறுக்கெழுத்துப்போட்டிகள், தமிழ் விடுகதைகள், வார்த்தை விளையாட்டு, குழு கலந்துரையாடல், ஆங்கில பொது அறிவுப்போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடைபெறுகின்றன.

போட்டியில் வெற்றி பெறுவோருக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை ஆலையின் மேலாண்மை இயக்குநர் முனைவர் செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ச. சூர்யபிரகாஷ் ஆகியோர் பரிசுகள் வழங்க உள்ளனர்.